# மட்டக்களப்பில் சமகாலச் சூழலில் மாந்திரிகத்தின் பயில்நிலை - அம்பிளாந்துறைக் கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

வடிவேல் இன்பமோகன்

மட்டக்களப்பில் முக்கியத்துவமுடையதொரு பயில்வாக மாந்திரிகம் விளங்குகின்றது. மாந்திரிகம் மட்டக்களப்பு மக்களின் சமூகச் செயற்பாடுகள் பலவற்றுடனும் இணைந்ததாக விளங்குவதால் அம்மக்களின் சமூக இயக்கத்தில் இன்றியமையாததொரு சக்தியாக கொள்ளப்படத்தக்கது. இதை மட்டக்களப்பு மக்களின் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாகக் கொள்ளலாம்.

ஆரம்பகாலங்களில் மட்டக்களப்பில் வலுவானதொரு சக்தியாக மாந்திரிகம் விளங்கியது. சமூகங்களில் ஏற்பட்ட அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி என்பன அதன் முக்கியத்துவத்தை சமகாலச் சூழலில் தளர்வுடையதாக்கியது. அத்துடன் நாட்டில் நிலவிய யுத்த சூழலும் மாந்திரிக செயற்பாட்டிற்கு பல வழிகளிலும் இடையூறாக அமைந்திருந்தது. இதனால் சமகாலச் சூழலில் மட்டக்களப்பில் மாந்திரிகம் ஆரம்ப காலத்தில் இருந்த வீரியத்துடன் பயிலப்படவில்லை எனலாம்.

மட்டக்களப்பில் மாந்திரிகம் ஆரோக்கியமான முறையில் பயிலப்படாத சமகாலச் சூழலில் மாந்திரிக மரபுத் தொடர்ச்சி இன்றுவரை நிலைத்து நிற்கின்ற பிரதேசங்களில் ஒன்றான அம்பிளாந்துறை கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு மட்டக்களப்புச் சமூகச் சூழலில் மாந்திரிகம் எவ்வாறு சமகாலச் சூழலில் பயிலப்படுகின்றது – பேணப்படுகிறது என்பதை கண்டறியும் முயற்சியாக இவ்வாய்வு அமைகிறது.

அம்பிளாந்துறை கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் இவ்வாய்வு மட்டக்களப்பு சமூகச்சூழலில் மாந்திரிகம் முக்கியத்துவம் பெறுவதற்கான கோட்பாட்டுப் பின்புலத்தை முன்வைத்தல்,

**திறவுச் சொற்கள்:** மாந்திரிகத்தின் பயில்நிலை, அம்பிளாந்துறை கிராமம், சூழல்

*நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம் E-mail: vinpamohan@yahoo.com*